
## அறிமுகம்: சிரித்திரன் சி.சிவஞானசுந்தரம்

# மகுடி பாம்பாகவும் புலி மகுடியாகவும்

விக்கிரமசிங்க



'செய்தொழில் தெய்வம் சிரிப்பே சீவியம்' என்ற மகுடத்துடன் தொடங்கப்பட்ட தமிழிலக்கியத்தின் புகழ் பெற்ற கருத்தோவியச் சஞ்சிகைகளில் ஒன்றான 'சிரித்திரன்' இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அராஜகத்திற்கு தலைவணங்கி சீவியம் நடத்தும் ஒரு சஞ்சிகையாக தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. டேவிட் லோவின் தூரிகை வரைந்த கார்ட்டூன் கணைகள் ஹிட்லரை நிலைகுலைய வைத்தது எனத் தனது 'சிரித்திரக் கொத்து 1' தொகுப்பிற்கு எழுதிய அகவுரையில் சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரம் வே.பிரபாகரனை ஒரு ஹிட்லராகப் பார்க்காது விட்டதும், தம்பியின் பச்சைப் பாஸிச நடைமுறைகளை நிலைகுலைய வைக்க தனது தூரிகையைப் பயன்படுத்தாது விட்டதும் எமக்கு உண்மையிலேயே திகைப்பையும் வியப்பையும் ஊட்டுகின்றது.

சுந்தர் எனப் புகழ் பெற்ற சிவஞானசுந்தரத்தின் கடும் உழைப்பால் தோன்றிய 'சிரித்திரன்' தமிழிற்கு கருத்தோவியக் கலையைக் கற்பித்த ஒன்று எனச் சொல்லுதல் மிகைப்படுத்தலாகா. ஆனால், இன்று இது அராஜகத்திற்கு காவடி தூக்குவது மட்டுமல்லாது, இனவாதத்தை மிகவும் கொடூரமாகக் கக்குமொன்றாகவும் மாறி விட்டது. எனவே இவரை புதிதாக அறிமுகம் செய்தல் எமக்கு அவசியமானதாகப்படுகின்றது.

இந்தியாவின் புகழ் பெற்ற பத்திரிகையான Blitz இல் தான் சுந்தரின் முதலாவது காட்டூன் பிரசுரமானது. இது பிரசுரமான வேளையில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை சுந்தரின் மொழியில் பார்த்தல் ரசனைக்குரியது. 'நான் வாழ்க்கையில் முதல் முதலாக வரைந்த காட்டூன் பிரபலமான பத்திரிகையின் முதல் பக்கத்தில் கொலு வீற்றிருந்தது. சந்தோசத்தைச் சொல்லவும் வேண்டுமா? பம்பாய் மக்கள் எனது காட்டூன்களை பார்த்திருக்கிறார்களா என்று அறிவதற்கு பஸ் ஏறி நகரை வலம் வந்தேன். என் கன்னிப்படைப்புக்கு கிடைத்த சன்மானமாகையால (அதாவது Blitz ஆசிரியர் கரஞ்சியா இவரது காட்டூனுக்காக கொடுத்த பணம்) அந்தப் பணத்தை செலவிட விரும்பவில்லை. பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். இடைக்கிடை எடுத்துப் பார்த்து எனது கலைக்கு கிடைத்த பொற்கிழி என எண்ணிப் பூரிப்பேன். ஒருநாள் பணநெருக்கடி வர அந்தப் பொற்கிழி பறந்தே போய் விட்டது'

கரஞ்சியாவின் பிளிட்ஸில் இவரது தூரிகை வாழ்வு தொடங்கிய போதும் இந்தியாவை விட்டு இலங்கைக்கு வந்ததும் இவரது திறமைக்கு செங்கம்பளம் விரித்தது ஒரு முற்போக்கு பத்திரிகை அல்ல. தமிழ் தேசிய வாதத்தை வளர்க்க என்றே தோன்றிய 'சுதந்திரன்'. இதற்குப் பின் இவருக்கு தொட்டில் போட்டுக் கொடுத்தவர் எமது முற்போக்கு இலக்கியகாரரின் குருவாகத் திகழ்ந்த பேராசிரியர் கா.கைலாசபதி. அமரர், 'தினகரன்' பத்திரிகையினது ஆசிரியராக இருந்த போதுதான் சுந்தரின் 'சவாரித்தம்பர்' என்னும் அற்புதமான பாத்திரம் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கைத் தமிழ் வாசகர் மத்தியில் இந்தப்பாத்திரம் அடைந்த வெற்றியை ஒரு சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். கவிஞர் விடிவெள்ளி 'தம்பரைக் காணாத நாளெல்லாம் நாமிங்கு பிறவாநாளே' என்று தம்பர் புராணம் பாடியுள்ளதாக சுந்தர் தனது அகவுரையில் குறிப்பிட்டுள்ளார். இதற்குப்பின்னர் இவர் வா.ரா வை ஆசிரியராகக் கொண்ட 'வீரகேசரிக்கு' தாவுகிறார். அங்கே 'பாணன்' என்ற பெயரில் அரசியல் காட்டூன்கள் வரைவதுடன் மட்டுமல்லாமல் மைனர் மச்சான், சித்திரகானம் போன்ற பகுதிகளையும் வேறு அறிமுகப்படுத்துகின்றார்.

பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தான் மைனர் மச்சானான எமது சுந்தர் தனது சிரித்திரனைத் தொடங்குகிறார். இந்தச் சஞ்சிகைக்கூடாக இவர் அறிமுகப்படுத்திய பாத்திரங்கள் பல. மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடிரன், மெயில்வாகனத்தார், அப்புக்குட்டி, சீனித்தாத்தா என்பன சில. இவைகளை விட எண்பதுகளில் வீரகேசரியில் அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்ரீமான்

செல்லக்கிளி பாரிய வரவேற்பைப் பெறாது விட்டாலும் கனதியான ஒரு பாத்திரம் என்பது எனது கணிப்பு.

காட்டூன் கலையை தமிழில் அனேகமானோர் கேலிச்சித்திரம் என்கின்றனர். இதில் சுந்தருக்கு துண்டாக உடன்பாடில்லை. இவரைப் பொறுத்தவரை இந்தக் கலை ஒரு 'கோமாளிக் கூத்தல்ல'. 'பூமியாகிய பூகோளத்திற்கு மேல் ஒரு சமாதானப் புறா அச்சத்தில் அசந்து போய் நிற்கிறது. புறாவின் தலையையும் கழுத்தையும் வரைந்து அதன் உடலை அணுக்குண்டாய் வரைந்திருந்தேன். சாவா? சமாதானமா? என்ற கருப்பொருள் கொண்ட காட்டூன் என்ன கேலிச்சித்திரமா?' எனக் கேட்கிறார் எமது சுந்தர். இவரது கேள்வி நியாயமானது தான்.

சுந்தரோடு நேருக்கு நேர் பழகிய எவரும் இவரது இனிய குணங்களுக்கு இன்றும் கூடச் சாட்சி சொல்வர். புதிய படைப்பாளிகளை ஊக்கவிப்பதில் இவர் ஒருபோதும் பின்னுக்கு நின்றதில்லை. சிரித்திரனிற்கூடாக வளர்க்கப்பட்டு, தற்போது புகலிடத்தில் வாழும் படைப்பாளியொருவர் தனது படைப்புகளை பிரசுரித்தது மட்டுமல்லாமல் தன்னைத் தேடி சுந்தர் தூதுவிட்டதாகவும் நினைவு கூறுகிறார். தேடிப் போகும் இளம் படைப்பாளிகளை துரத்தும் பத்திரிகா, சஞ்சிகாசிரியர்களைக் கொண்ட எமது எழுத்துலகினுள் சுந்தர் மிகவும் விசித்திரமானவராக இருந்தார் என்பதை ஒருபோதும் மறுதலிக்க முடியாது.

சுந்தரால் படைக்கப்பட்ட அனைத்துப் பாத்திரங்களும் இலங்கை வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களை விமர்சனத்துடன் படம் பிடித்துள்ளன. இந்தப் படைப்புகள் அனைத்தும் சமூகவியல் ஆய்வுக்கான பெறுமானங்களைக் கொண்டுள்ளன. குறும்பினை நாகரிகமாகவும் சிந்தனைக்குரியதாகவும் ஆக்கியவர் இவர். இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மகுடி பதில்கள் சூசகமாக பல உண்மைகளை வெளிக்கொணர்ந்த ஒன்றாகும். கேள்விப் பாம்புகளை ஆட்டிய இந்த மகுடி, புதுப்புதுச் சொல்களை உருவாக்குவதில் விண்ணனாகத் திகழ்ந்தவர். சுவை மீட்டல், முரண் முறுவல், எண்ணத் தோகை, குறுமணி, செய்திச் சுண்டல், கதைத் தேன் போன்றவை ஒரு சில.

ஆனால் என்ன செய்வது! பாவம் சுந்தர்! இவ்வளவு மகுடங்களையும் அபிமானங்களையும் கொண்டிருந்த போதும் இன்று புலிகளுக்கு காவடி தூக்குவதன் மூலம் தமிழ் மக்களுக்கு வேடிக்கை காட்டத் தொடங்கி விட்டார். சயனைட் கலாசாரத்துக்கு துதி பாடுதல் 'வேடிக்கைக்'குரியதல்ல என்பதை இவர் எவ்வாறு புரியாது விட்டார் என்பது தான் உண்மையிலேயே வேடிக்கைக்குரியது. சுந்தருக்கு மிகவும் நெருங்கிய நண்பர் ஒரவர் என்னிடம் அண்மையில் 'இவருக்கென்ன அறளை பெயர்ந்து விட்டதா?' என்று கேட்டுக் கொண்டார்.

போர்க் காலத்து நெருக்கடிகளால் சிரித்திரனின் வருகை தடைப்பட்டிருந்தது. மனிதநேசம் கொண்ட சுந்தர் பாஸிஸத்துக்கு இரையாகுவதைத் தவிர்க்குமுகமாக எழுதாதிருத்தல் நல்லதென முடிவெடுத்தாரா என நான் எனக்குள் நினைத்துக் கொண்டேன். ஆனால், 1990 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடொன்றில் சுற்றுலாவிற்குச் சென்ற போது திடுக்கிடும் அனுபவம் ஒன்று எனக்கு ஏற்பட்டது. ஒரு வீரகேசரி வாரவெளியீட்டில் சுந்தரின் 'சிரித்திரன் சித்திரக் கொத்து' என்ற கருத்தோவியத் தொகுப்புப் புத்தகம் நல்லை ஆதீனத்தில் வெளியிடப்பட்டது என்ற செய்தியை வாசித்தேன். இப்படியொரு தொகுப்பு வெளிவந்ததல்ல என்னுள் திகைப்பையூட்டியதற்குக் காரணம். இது எவரால் வெளியிடப்பட்டது என்பது தான் என்னைச் சிறிது நடுங்க வேறு வைத்தது. கவிஞர் வே.பிரபாகரன் தவிர்ந்த, அனைத்து முக்கியமான புலிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். அன்ரன் பாலசிங்கம் கருத்துரை வேறு ஆற்றியிருந்தார். கை வழங்கா நிலையிலிருந்து சுந்தரிடம், எமது மார்க்ஸிஸப் புலியான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி 'கை வழங்காதிருந்தாலும் கூட ஓவியர் தனது ஓவியப் பணியைக் கைவிடக் கூடாது' எனக் கேட்டதும் இந்த நிகழ்வில் தான். சிவத்தம்பி புலிகளுக்கு மட்டுமல்ல, எலிக்கும் ஒத்தூதக் கூடியவர். (இவர் பற்றிய அறிமுகம் இன்னும் சில வாரங்களில் உங்களுக்கு வழங்கப்படும். இந்த அறிமுகத்தில் சேர்க்க எமக்கு இவரது போட்டோவைத் 'தாயகம்' முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். அனுப்புபவர் விரும்பின் அனாமதேய தர்மம் காக்கப்படும்) என்ன செய்வது? சுந்தரையும் இந்தப் பாழுங் கூட்டம் விழுங்கி விட்டதே!

இந்த நிகழ்வின் பின் இன்னொரு முக்கியமான நிகழ்வு நடக்கின்றது. (இந்த நிகழ்வு பற்றிய ஆண்டினை என்னால் தர முடியாது. புகலிடத்துப் புலிகளின் கிளைகள் இந்த நிகழ்வுகள் மீது பெரிதாக விளம்பரங்கள் எதையும் நடத்தாத ஒரு போக்கைக் கொண்டுள்ளன. இவை பற்றிய தகவல்களை உடனுக்குடன் பெறும் எமது 'முற்போக்குக் காரர்களும்' 'நவீன புரட்சியை நடத்துபவர்களும்' எங்கோ எமக்கு கிடைத்தால் நாம் இவைகளைப் பற்றி எழுதி விடுவோமா என்ற பயத்தில் தமது மாடி வீடுகளின் 'பதுங்குகுழி'களுள் இத்தகவல்களை உடனுக்குடன் தாட்டு விடுகிறார்கள். ஆ! இதுவல்லவோ முற்போக்கு!) அதாவது சுந்தரிற்கு புலிகள தமது முத்(ட்)தமிழ் விழாவில் பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளார்கள். (இந்தப் பதக்கம் எமது முதுபெரும் எழுத்தாளரான வல்வை அ.ந. இராசரத்தினத்துக்கும் வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை பிரான்ஸில் வாழும் பிரபல எழுத்தாளர் ஒருவர் 'அட! நான் இங்க வராம அங்க இருந்திருந்தனெண்டா, எனக்குமெல்லே பெடியள் பதக்கம் தந்திருப்பாங்கள்' எண்டு குமுறிக் கொண்டுள்ளாராம்) இது எனக்கு இரண்டாம் உலக யுத்தத்தின் போது, கலைஞர்கள் பலர், பாஸிஸத்தின் பிடியிலிருந்து தப்ப அதனது வாலை நக்கி உயிர் வாழ்ந்ததையே ஞாபகமூட்டுகிறது.

இந்தக் கலைஞர்கள் பாஸிஸம் ‘அழிந்தபின்’ தாம் வாழ்ந்த நெருக்கடியைச் சொல்லி பாவமன்னிப்புக் கேட்டுள்ளனர். ஆனால் சுந்தர் நெருக்கடியை வாழ்கின்றாரா? அல்லது ஆதரிக்கின்றாரா என்பது கேள்விக்குரிய ஒன்றாகும்.

‘சிரித்திரன் சித்திரக்கொத்து’ ‘பதக்கம்’ இவைகளின் பின் ‘சிரித்திரன்’ வெளிவந்துள்ளது. எங்கே? தமிழீழத்தில் அல்ல. பிரான்ஸில். அதுவும் மின்கணனியின் துணையோடு.. ‘ஆமி பள்ளிக்கூடத்தில் புகுந்திருக்காம்..’ ‘நல்ல செய்தி.. இப்பதான் சகோதரங்களுக்கு படிப்பில் ஆசை வந்திருக்கு’ என்ற முகப்புப்படச் சுவை மீட்டலுடன். சிரித்திரனுக்கு ஒரு கட்டுரை எழுத ஆசை. ஆனால் முகவரி தான் இல்லை. ‘எங்கே போய் முட்ட’ என்று தாயகம் பாணியில் கேட்பதை விட வேறு வழி எதுவும் இல்லை. புகலிடத்தில் வெளியிடுப்படுவதாக நம்பகரமாக என்னால் அறியப்படும் ‘சிரித்திரன்’ அங்கே நான் பார்த்த சிரித்திரன் இல்லை. தேசிய வாதத்தையும் இனவெறியையும் நூறு வீதம் கக்கும் ‘சிரித்திரன்’ தான் அது. இதனது விலை 15 ரூபா. மின்கணனியில் ஒரு சஞ்சிகையை அடித்து தமிழீழத்தில் பதினைந்து ரூபாவுக்கு விற்றல் என்பது ‘காதுக்குள் பூ வைக்கும் கதை தான்’. 15 பிராங் தான் 15 ரூபா என எழுதப்பட்டதாக நான் நினைக்கின்றேன். இந்த இதழில் சுந்தர் பாம்பாகியதையும் புலி மகுடியாகியதையும் தலையைப் போட்டு உடைக்காமலே என்னால் இனம் காண முடிகிறது. உதாரணத்திற்கு இந்த கேள்வி பதிலை வாசித்துப் பாருங்கள்.

✪ தமிழீழம் எப்படியிருக்கும்?
குருதி உதிரத்தில் வளரும் விருட்ஷம் ஆனந்த அமிர்தம் தரத்தான் போகிறது.

இதே வேளை ‘குரு(தி)ஷேத்திரம்’ என்ற தலைப்பினைக் கொண்ட கதை புலிகளினால் எமது சிறிசுகள் சயனைட் கலாசாரத்துக்கு தள்ளப்படுவது நல்லது தான் என்பதை ஊக்குவிக்கிறது. இதைவிட எமது ‘புதுமை’ இரத்தினதுரையின் ‘சோக்கான’ கவிதை ஒன்றும் உள்ளது. இதேவேளை ‘புகலிடச் சிரித்திரன்’ தமிழ் மக்களைப் பார்த்து ‘சிறுத்திரன்’ எனப் போதிக்கின்றதையும் அவதானிக்க முடிகிறது.

‘சிரித்திரன்’ இதழ் தமக்கு கிடைக்கவில்லையே என வாசகர்கள் கதிகலங்கத் தேவையில்லை. புகலிடப் புலிக் கிளைகளே இதனது ஏக வினியோகஸ்தர்களாக உள்ளது. இதில் வெளிவரும் ஆக்கங்களை லண்டனில் இருந்து வெளிவரும் புலிக்கிளை வெளியீடான ‘களத்தில்’, பிரான்சில் புலிக்கிளை வெளியீடான ‘எரிமலை’ போன்றன எடிட்டிங் செய்யாமல் பிரசுரித்து வருகின்றன. எனவே இந்த வெளியீடுகளை வாங்கி ‘செய்தொழில் தெய்வம், சிரிப்பே சீவியம்’ எப்படியுள்ளது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

சிவஞானசுந்தரம் ஒரு மனிதாபிமானி என்பது உண்மை தான் எனச் சொல்வோர் இவர் ‘மண்ணின்’ மீது தீவிர பற்றுக் கொண்டவர் என்றும் யாழ்ப்பாண மண்ணை விட்டு வெளியேறுதல் இவருக்கு அலர்ஜி என்பதனாலேயே, லண்டனில் வாழும் தனது மகனுடன் சென்றிருக்காமல் அங்கேயேயிருக்கிறார் என்கின்றனர்.

இது ‘அடைந்தால் மகாதேவி, இல்லையேல் மரணதேவி’ எனும் குருட்டுப் போக்கையே காட்டுகின்றது. தமிழ் மக்கள் பாரிய அராஜகத்தின் கைதிகளாக உள்ள இந்தக் கால கட்டத்தில் சுந்தர் அதற்கு சேவகம் செய்வதன் மூலம் தனது தலையில் தானே மண்ணை கிள்ளிப் போட்டுக் கொள்கிறார். இது எம்மைப் பொறுத்த மட்டில் கைகொட்டிச் சிரிக்கும் ஒன்றல்ல என்பதை மட்டும் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறோம்.

# மகுடி: இவர் ஒரு மாமனிதர்

விக்கிரமசிங்க

மகுடி மீதான எனது அறிமுக மதிப்பீடு மிகவும் நிதானமாக முன் வைக்கப்பட்ட ஒன்று. இவரது திறமை, இனிய குணம், இளம் படைப்பாளிகளை வீடு தேடிச் சென்று பாராட்டும் மனப்பக்குவம், இவைகளை தாராள மனதுடன் நுகர்விற்கு விட்ட வேளை, புலிகள் இயக்கத்துடனான இவரது தொடர்பு கேலிக்கூத்தாகவே பார்க்கப்படும் என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தேன். ஆனால், இவரோ, புலிகளின் மீதுள்ள தனது பாசத்தை பச்சையாக வெளிக்காட்டத் தொடங்கியுள்ளார். எனவே முந்திய அறிமுகத்தை பூர்த்தியாக்க சில புதிய குறிப்புகள்.

புதியவன் என்பவர் சுந்தருடன் சில மணி நேரம் செலவிட்டு ஒரு பேட்டி கண்டுள்ளார். 'ஈழநாடு' வெளியிட்ட இந்தப் பேட்டியில் தான் ஒரு மாமனிதர் என்பதை சுந்தர் ஏற்றுக் கொண்டுள்ளார். சாகித்ய மண்டலம் கொடுத்த பாராட்டையும் பரிசையும் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். ஏனெனில் இவை கண்துடைப்புக்காக எறியப்படும் எலும்புத் துண்டுகள். இவைகளுக்கு ஆசைப்படும் தமிழன் அல்லர் மகுடி. ஆனால் உதிரம் சொட்டும் விரல்களைக் கொண்ட கவிஞரிடம் இருந்து எதையும் பெற்றுக் கொள்ள இவர் தயார். இவர் தனது பேட்டியில் புதியவனுக்கு 'எனக்கு கிடைத்த பெரிய கௌரவம் என்றால், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரால் எனக்கு வழங்கப்பட்ட 'மாமனிதர்' விருது என்றுதான் சொல்வேன்' சும்மா கிடந்த வாய்க்கு அவல் கிடைத்தால் எப்படியிருக்கும். ஈழநாடு விட்டதா? தனது ஆண்டு விழாவில் 'மாவீரர்' ஒருவரை வெளியில் தூக்கி எறிந்த களங்கத்தை போக்க கொட்டை எழுத்தில் பிரஸ்தாப பொன்மொழியை வெளியிட்டது.

தம்பி நடத்தும் தர்மயுத்தத்தால் பெருமளவில் பாதிக்கப்பட்டவை கோழி முட்டைகளே அன்றி மக்கள் அல்ல என மாமனிதர் ஒரு அற்புதமான ஜோக் அடித்துள்ளார். 'விமானக் குண்டுவீச்சால் பெருமளவில் அடைக் கோழிகள் தான் பாதிக்கப்பட்டு கூழ் முட்டை ஆகிறது. மக்கள் பெரிதளவில் பாதிக்கப்படவில்லை. அவர்கள் தங்களைப் பாதுகாக்கப் பழகி விட்டார்கள்'. இவர் யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றாரா? இல்லை, கவிஞரின் பங்கருக்குள் வாழ்கின்றாரா என்ற சந்தேகம் பலப்படுகிறது.

தமிழீழத்தில் 'ஒரு பெண் சுதந்திரமாக நடமாட இப்போது முடிகிறது' என்று 'நாட்டு நிலைமை' மீதான கேள்விக்கு பதிலளித்துள்ளார். இதற்கு அர்த்தம் 'மாதர்தம்மை இழிவு செய்யும் மடமை தமிழீழத்தில் கொழுத்தப்பட்டது' எனக் கொள்ளலாமா?

தன்னால் எழுதப்படுபவை புலிகளைக் கவர்கிறது என்கிறார். (ஆகா, கிண்டலிலும் குறும்பிலும் புலிகளுக்கு எத்தனை தாகம். கவிஞர் தலைவர் விரைவில் சிரித்திரனில் தனது ஜோக்குகளை வெளியே விடுவார் என்று எதிர்பார்க்கலாம்) இதனால் தான் தனக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டது என்பதை சொல்லாமல் சொல்கிறார்.

சுந்தர் இடதுசாரி எழுத்தாளர்களை விமர்சித்துள்ளார். ஒரு சிலர் தவிர்ந்த (யார் அவர்கள்? சிவத்தம்பி, அலை யேசுராசா, சி.முருகையன்...) சமதர்மம் பேசாமல் காணாமல் போய் விட்டார்களாம். எல்லா இடதுசாரிகளும் புலிசாரிகளாக மாறுது விட்டதையிட்டு, 'மாமனிதர்' கவலைப்படுவதில் நியாயம் உண்டு. முற்போக்கு சாயம் பூசிய இடதுசாரி எழுத்தாளர்கள், புலியிசத்துக்கு முந்திய 'சிரித்திரனின்'